


**Chisel & Evolve**

"Discover the "YOU" in you"

**திருமதி. ஷியாமளா ரமேஷ் பாபு,** M.Sc., B.Ed, DCHR , **'CHISEL AND EVOLVE'** என்ற தளம் மூலமாக ஆயிரக்கணக்கான பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடையே தன் ஊக்குவிப்பு பேச்சால் தன்னம்பிக்கை விதைப்பவர்.

ஆசிரியர் பயிற்சியாளர், ஊக்குவிப்புப் பேச்சாளர், தொலைக்காட்சி பட்டிமன்ற பேச்சாளர், என இவருக்கு பன்முகம்

"உன்னால் எதுவும் முடியும்", என்ற உத்வேக தொனியும், பார்வையாளர்களிடம் நேர்மறை எண்ணங்களைத் தூண்டும் வார்த்தைகளும், கனிவான அணுகுமுறையும் தான் இவரை சமுதாயத்தின் பல்வேறு தரப்பு மக்களின் மனதில் கொண்டு நிறுத்தியது.

பதின்வயது மாணவர்களுக்கு 10 ஆண்டுகள் பாடம் சொல்லிக்கொடுத்த அனுபவமும், அதன் வாயிலாக அவர்களுக்கு வாழ்வியல் பாடத்தை எளிமையாக கொண்டுசெலுத்திய அனுபவமும் தான் இவரை இந்த களத்திற்கு ஈர்த்தது.

மனச்சோர்வையும், சோம்பேறித்தனத்தையும் தகர்க்கும் விதமாகவும், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் புதைந்து கிடக்கும் பேராற்றலை வெளிக்கொணரும் விதமாகவும் அமைந்த இவரது உத்வேக வார்த்தைகளும், மனிதவளத்துறையில் இவரது ஆலோசனைத் திறன்களும், பல்வேறு நிறுவன ஊழியர்களின் செயல்திறனை அதிகரிக்கும் உந்து சக்தியாக விளங்குகிறது.

"விழுமியங்கள் - வாழ்ந்துகாட்டி கற்பிக்கப்பட வேண்டும்...
வாசித்துக்காட்டி அல்ல".

"பதின்பருவம் - சுடாத களிமண். தரமான சுட்ட பாண்டம் உருவாவது, பெற்றோர், ஆசிரியர், சமுதாயம் எனும் குயவர்கள் கையில்".

"அன்பெனும் உளியும், ஊக்கமெனும் சுத்தியலுமே, இளைய சமுதாயத்தை செதுக்கும் நற்கருவிகள்"

"தரமுத்திரைகள் குழந்தைகளுக்கு அல்ல"

"உப்பிடுதல் அதிகமானால் உடலுக்குக்கேடு.
ஒப்பிடுதல் சிறிதேயானாலும், குழந்தைகள் மனதிற்கு கேடு"

இதுபோன்ற இவரது மேற்கோள்கள், பல கல்வி நிறுவனங்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்களிடையே மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியவை.

உலகின் மிகப்பெரிய பல்கலைக்கழகப் பதிப்பகமான ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பதிப்பகத்தில் [Oxford University Press] சார்பற்ற வளவாளராக (freelance resource person ) இந்தியா மற்றும் அண்டை நாடுகளில் உள்ள பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் தன்னம்பிக்கை விதைகளை தன் பேச்சின் மூலம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக விதைத்து வருகிறார்.

TNSCERT பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பதிப்பகத்திற்காக ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான "ஆடிப்பாடி தமிழ் படி" எனும் இவர் எழுதிய தமிழ்ப்பாட நூல்கள் திரு.வெ.இறையன்பு I.A.S அவர்களால் வெளியிடப்பட்டது.

ஆனந்தவிகடன் இணையதளப்பதிப்பில் "பெற்றோரியம்" பற்றிய இவரது தொடர் கட்டுரைகளுக்கு வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது

~OO~